# தமிழ் வளர்ச்சியில் பௌத்தர்களின் பங்கு

**அ.பாபு**
**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்**
**ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,கலை,அறிவியல் கல்லூரி,**
**மயிலம் - 604304. babuda93213@gmail;com**

9

**ஆய்வுச் சுருக்கம்**

வடநாட்டில் இருந்து தென்நாடு வந்த மதங்களைப் பண்டைப் பெரியோர் இரண்டு வகையாகப் பிரித்தனர். அவை பிரமண மதம், மற்றொன்று சிரமண மதம் என்பனவாகும். பிரமணமதம் என்பது வைதீக மதம், சிரமண மதம் என்பது பௌத்த ஜெனமதங்களாகும். சிரமணம் என்னும் சொல் தமிழில் சமணம் என வழங்கப்படும். சமண மதம் என்றால் ஜைன மதத்துக்கு மட்டும் பெயராக இக்காலத்தில் பெரும்பான்மையோரால் கருதப்படுகிறது. ஆனால் சமணம் என்னும் சொல் வைதீக மதத்துவர் அல்லாத பௌத்த ஜைன மதங்களுக்குப் பொதுப் பெயராகப் பண்டைய காலத்தில் வழங்கி வந்தது. சமணர்களாகிய பௌத்த ஜைனர்கள் தங்கள் மதக் கொள்கைகளை உலகத்திள்ள மக்கள் எல்லோரும் அறிய வேண்டும். என்னும் விரிந்த மனப்பான்மை உமையவர்கள் ஆகையால் அந்தந்த நாடுகளில் பேசப்படும் தாய்மொழிகளில் தங்கள் சமய உண்மைகளை எழுதியும், பேசியும் வந்தனர். தமிழகத்திற்கு வந்த பைளத்தர்கள் தங்கள் மதக் கொள்கைகளை தமிழ் மொழியில் பரப்பத் தொடங்கினர். சில பௌத்தர்கள் தமிழ்மேல் கொண்ட பற்றினாலும், இன்பத்தினாலும் தமிழ் மொழியை முறைப்படி கற்று இலக்கியங்கள் இயற்றலாம் எனும் எண்ணம் கொண்டு அவ்வாறு செய்தால் அவை காலம் கடந்து பேசப்படும். எனும் நோக்கில் பைளத்தப் பள்ளிகள் மூலமாகத் பாலிமொழியையும் தமிழ் மொழியைம் கற்பித்தனர். அப்பள்ளிகள் மூலம் தங்கள் பாலிமொழி இலக்கியத்தை தமிழிலும். தமிழ் மொழி இலக்கியத்தை பாலிமொழியில் இயற்ற ஆரம்பித்தனர். பின்னர் தமிழ் மொழிக்கு அணிசேர்க்க இலக்கியங்களும். இலக்கணங்கள் செய்து தமிழ்தாய்க்கு அழகு சேர்த்தனர். இவர்கள் பல நூல்களை செய்தாலும் காலப்போக்கிலும்.சமயக் காழ்புணர்ச்சியாளும். அழிந்து ஒருசில நூட்களே எஞ்சியுள்ளன. அவற்றைப்பற்றி ஆய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

**முன்னுரை**

பைளத்த மதம் தற்பொழுது தமிழகத்தில் இல்லாமல் போய் இருக்கலாம். ஆனால் பௌத்தம் மேலோங்கிய காலத்தில் பௌத்தர்கள் எண்ணற்ற நூல்கள் எழுதி இருக்கவேண்டும். அவ்வறு எழுதிய நூல்கள் சமய காழ்புணர்ச்சியின் காரணமாக அழிந்திருக்க கூடும் தற்பொழுது ஒரு சில நூல்களைத் தவிர பிற நூல்கள் பெயரளவில் காணப்படுகிறது. அவ்வாறு பெயரளவில் காணப்படும் நூல்களை வரிசைப்படுத்தி பின்வரும் தலைப்பின் கீழ் விரிவாகக் காண்போம்.

**கருச்சொற்கள்**

பௌத்த பிக்குகள், பௌத்தப் பள்ளிகள், பௌத்த படுகைகள், பௌத்த விகாரங்கள், சமயப்பொறை

**பௌத்தர்கள் வளர்த்தெடுத்த தமிழ் நூல்கள்**

பௌத்தர்களால் தமிழ் மொழியில் தோன்றிய நூல்கள் பற்றி நீலகேசி உரையிலும், வீரசோழிய உரையிலும் பௌத்த மத செய்யுள்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் சில பாடல்கள் எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டன. என்று அறியப்படாமல் இருக்கின்றன. எனவே பண்டைய காலத்தில் பௌத்த மதம் தமிழ்நாட்டில் வழங்கி வந்த போது பௌத்தரால் இயற்றப்பட்ட நூல்கள் பல இருந்தன என்பது ஐயமில்லை. ஆனால் அவை காலவெள்ளத்தில் சிதைந்து உள்ளது தற்பொழுது. 1. மணிமேகலை, 2. வீரசோழியம், 3. குண்டலகேசி, 4. சித்தாந்த தொகை 5. திருப்பதிகம், 6. விம்பிசார கதை இவற்றில் மணிமேகலை மட்டுமே முழுவதும் கிடைக்கும் நூலாகும் மற்றவை ஒருசிலப் பாடல்களும் வேறுசில நூட்கள் பெயரளவிலும் கிடைக்கின்றன. இவ்வாறு எச்சியுள்ளவைப் பற்றி பின்வரும் தலைப்பின் கீழ் விரிவாகக் காண்போம்.

**மணிமேகலையால் தமிழ்தாய்கு தந்த அணிகலன்கள்**

ஐம்பெரும்காப்பியங்களில் பௌத்தர்களால் இயற்றப்பட்டவை மணிமேகலையும் குண்டலகேசியும் ஆகும். இவை ஐம்பெரும் காப்பியங்களில் கூறப்பட்டாலும் மணிமேகலைத் தவிர மற்றவை இறந்துவிட்டன. என்றே கூறவேண்டும். தமிழகத்திற்கு சமயம் பரப்ப வந்தவர்கள் தங்களுடைய சமயக் கருத்துக்களை அப்படியே பரப்பாமலும் மக்கள் மேற்கொள்ளும் சமயத்தை புண்படுத்தாமலும் அவர்கள் சமயத்தோடு ஒன்றிய கொள்கைகளையே பரப்பினர். அவ்வாறு செய்தால் மட்டுமே மக்கள் ஏற்றுக் கொள்ளுவார் என்பதை அவர்கள் உணர்ந்து இருந்தார்கள் என்றே கூறவேண்டும். மேலும் சிலம்பும் மணிமேகலையும் ஒன்று என்பதனை

**மணிமே கலைமே லுரைப்பொருண் முற்றிய**

**சிலப்பதிகார முற்றும் ( சிலம்பு.வஞ்சிகாண்டம் கட்டுதை பகுதி)**

என்று கூறினாலும் இரண்டும் ஒரே கதையின் தொடர்ச்சி என்றாலும் ஆன்றோர் இவையிரண்டினையும் வெவ்வேறு காப்பியங்களாகவே கொண்டனர். சிலப்பதிகாரம் பலத்திறத்தாலும் சிறப்புடைய நூல் சொல் ஆழமும், பொருள் ஆழமும் செறிந்து திகழும் இந்நூல். இலக்கியம் மட்டும் அல்ல. பண்டைய தமிழ்நாட்டின் வரலாற்றினையும் கலையையும், நாகரிகத்தையும், அக்காலத்தில் இருந்த சமயங்கள் அவற்றின் கொள்கைகள் முதலியற்றை அக்கால பழக்க வழக்கங்களையும் ஆராய்வதற்கு இது பெரிதும் பயன்படுகிறது. இந்த மணிமேகலை நூல் தமிழ்த்தாய்க்கு அணிசெய்யும் மணிமேகலையாகவே விளங்குகிறது. இந்நூலை 1894 ல் அச்சில் ஏற்றியவர் திரு.மயிலை சண்முகம் பிள்ளையால் மதராஸ் அச்சகத்தில் பதிக்கப்பட்டு 12-அணாவுக்கு விற்கப்பட்டன. இப்பதிப்பு வெளிவந்து நான்கு ஆண்டுகள் ஆனப் பின்பு டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பிரதிகளை ஆராய்ந்து 1898-ல் அரும்பதை உரையுடன் அச்சில் பிறப்பித்து வெளியிட்டார்.

**பௌத்தர் தமிழகத்தில் வேரூன்றிய காலம்**

அசோக மன்னர் ஆண்ட கி.மு 275 முதல் 232 வரையிலான காலகட்டத்திலேயே பௌத்த மதம் தென்னகத்தில் புகுந்து வேரூன்ற தொடங்கியது. அசோக மன்னன் மூவேந்தரையும் தன் நண்பராக குறிப்பிடுகின்றான். பூதமங்கலம், போதிமங்கலம், பூம்புகார், உறையூர், பொன் பற்றி, மதுரை, நாகை முதலிர இடங்களில் பௌத்தர்கள் பள்ளிகள் அமைத்து தங்கி தம் மதங்களை பரப்பி வந்தனர். அசோகர் காலத்திலேயே பௌத்தர்கள் பலர் தமிழகம் வந்து தமிழர்களை தம் மதத்திற்கு மாற்றி தமிழகம் எங்கும் பௌத்த விகாரங்களையும், பள்ளிகளையும், ஆசிரமங்களையும் எழுப்பினர். இவர்களுக்கு சமய பொறை மிகுந்த இராசராசன் போன்ற பேரரசர்கள் பௌத்த விவகாரத்தை கட்டித்தந்தனர். என்று தந்தம் வரலாறு உரைக்கின்றது.

**இலக்கியத்திற்கு பௌத்தர்கள் ஆற்றிய பணி**

சங்க இலக்கியமான நற்றிணையில் 72 ஆம் பாடலை பாடியவர் இளம்போதியார் என்பவர் இவர் பௌத்த சமயத்தவர். ஆனாலும் இலக்கிய பொருண்மை நீங்காமலும் சமயம் சார்ந்த ஒழுக்கத்தை மறைமுகமாகவும் அப்பாடலில் சுட்டிக்காட்டுகிறது

**சான்றாக**

**பேணுப பேணார் பெரியோர் என்பது**
**நாணுத் தக்கன்று அது காணுங்காளை ( நற் .பா.72)**

இப்பாடலில் பயின்றுவரும் பொருண்மைகள் பௌத்தம் சார்ந்த ஒழுக்கப் பதிவுகளாக காட்டப்பட்வில்லை ஆனாலும் பைளத்த நெறியை உணர்ந்தவர்கள் இப்பாடலின் உள் பொருண்மை செய்தியை அறிந்து கொள்ளமுடிகிறது. என்பதை இப்படலின் வழி அறிந்துகொள்ளலாம். இவை மட்டும் இன்றி மதுரைக்காஞ்சியிலும் புத்த சமண மத பள்ளிகள் பற்றி குறிப்புகள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

**சான்றாக**

**திண்கதிர் மதாணி ஒண் குறு மாக்களை**
**ஓம்பினர்த் தழீஇ தாம் புணர்த்த முயங்கி**
**தாது அணி தாமரைப் போது பிடித்தாங்கு**
**தாமும் அவரும் ஓராங்கு விளங்கக் மதுரை. (காஞ்சி.465)**

எனும் அடியின் மூலம் பௌத்தப்பள்ளிகள் பற்றிய செய்தி பௌத்தர்களின் செல்வாக்கும்.பௌத்தர்களை மன்னர்கள் எவ்வாறு மதித்தனர். என்பதை இப்பாடல் கொண்டே அறிந்துகொள்ளலாம். மேலும் அரவணடிகள் கோவலன் மகள் மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், சங்கமித்ரா, தரும பாலன், புத்தமித்திரர், தின்னாகர நாககுதனார், புத்த தேவர், போன்ற சிறந்த பௌத்த சமய தமிழ் சான்றோர்கள் தமிழ் மொழிக்கென அரும்பாடு பட்டனர். கலை மிகுந்த காஞ்சியில் பயின்ற தின்னாகரம் தருமபாலரும் புகழ்பெற்ற நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைமை பெறுப்பேற்று இருந்த பெருமை படத்தக்க பேராசிரியர் பௌத்தமதத்தின் வழியே பள்ளிக்கூடம் என்னும் சொல்லும்.

புத்தமதம் நமக்கு அளித்த சொல்லாகும். இன்றைய தமிழ் எழுத்திற்கு ஓரளவு உருவம் கொடுத்த பெருமை இவர்களைச் சாரும் பௌத்த மதத்தின் செல்வாக்கினால் பண்டை பெருமைமிக்க இந்து சமயத்திலும் சில பழக்க வழக்கங்களும் மரபுகளும் புகுந்தன. சான்றாக வேள்வியில் உயிர் பலி கொடுத்தலும், அரசமர வழிபாடும் பௌத்த மதத்தில் செல்வாக்கினால் வந்த பழக்கங்கள் என்று கூறப்படுகின்றன.

**பௌத்தர்களின் இலக்கியப் பணி**

மணிமேகலை குண்டலகேசி ஆகிய இருபெரும் காப்பியங்களை படைத்து அளித்தடித்தனர். இரண்டு காப்பியங்களுமே சமயத்தைச் சேர்ந்த பெண்ணின் துன்பம் காரணமாக தம் மதத்தை துறந்து நிலையான இன்பம் பெற பௌத்தத்தை தழுவியதாக தெரிவிக்கின்றன. குண்டலகேசியில் புத்த மதம் சார்பாக விவாதங்களை காணலாம். இதன் ஆசிரியரான நாதகுத்தனார் சமண சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே இந்நூலை எழுதியதாக தெரிகிறது. மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் நற்றிணை குறுந்தொகை புறநானூறு போன்ற சங்கத் தொகை நூல்களை சில பாடல்களை இயற்றியுள்ளார்.

**பிம்பிசாரர் கதை**

இந்த பெயர் கொண்ட பௌத்த நூல் இருந்தது. என்பது நீலகேசி உரையினால் (190 வது பாட்டுரை ) நீலகேசி உரையாசிரியர் விம்பிசாரர் கதையில் இருந்து நான்கு வரிகளைக் கூறி இது விப்பிசாரர் நூல் பைளத்த மதம் சார்ந்த நூல் மேலும் அறிந்துகொள்ள அந்நூலில் கண்டுகொள்க. என்று எழுதியிருகிறார்.இது மகத நாட்டு மன்னனான விம்பிசாரன் புத்த மகா பகவானின் நல்லுரைகளையும் அறிவுரைகளையும் கேட்டு பௌத்தனான வரலாற்றை கூறுகிறது. இந்நூல் ஆசிரியப்பாவால் ஆனது நூல் முழுவதும் கிடைக்கவில்லை இதன் ஆசிரியரும் யார் என தெரியவில்லை இக்காப்பியத்தின் பெயரைக்கொண்டு இது புத்தர் காலத்தில் இருந்துன என்பதை மட்டும் அறிந்து கொள்ளலாம்.

**சித்தாந்த தொகை**

பௌத்த சமயக் கொள்கைகளை விளக்கி கூறும் சமய விளக்கு நூலாக திகழ்கிறது. இதில் சில பாடல்களை கிடைத்துள்ளன இதன் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை.சிவஞான சித்தியார் என்னும் சைவ சமய நூலுக்கு ஞான பிரகாசம் எழுதிய உரையில் பரபக்கம் சௌத்திராந்திகன் மதம்2,3,1 பாட்டுகளின் உரை கீழ்கண்ட செய்யுளை இந்நூலில் இருந்து மேற்கொள்காட்டியிருக்கின்றன.

**அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடகடகிப்**
**பொருண் முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்றன்**
**அருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பர்**
**மருணெறியாம் பிறநூலும் மயக்கறுக்கு மாறுளதொ (புத்தவதச் சுருக்கம் 64)**

இவற்றைத் தவிர இந்நூல் பாடல்கள் வேறு எங்கும் காணப்படவில்லை.

**திருப்பதிகம்**

புத்த பெருமானை வாழ்த்து முகமாகும். அவரது அருளை ஏற்று முகமாகவும் 10 பாடல்கள்

ஏற்றப்பட்டுள்ள. இந்நூல் தோத்திர நூலாகும். இதிலும் ஓரிரு பாடல்களை கிடைத்துள்ளன இது ஒரு சிறந்த நூலென ஞானப்பிரகாசரால் பாராட்டப்பட்டுள்ளது சிவ ஞானச்சித்தியார்(பரபக்கம் சைளத்திராந்திகன் மதம், 2 ஆம் செய்யுள் ,மறுதலை ,8 ஆம் செய்யுள்) உரையில் ஞானப்பிரகாசம் கீழ்கண்ட செய்யுளை மேற்கோள் காட்டுவார்.

**எண்ணிகந்த காலங்க ளெம் பொருட்டான் மிகழன்று**
**எண்ணிகந்த காலங்க ளிருடீர வொருங்குணத்தும்**

நீலகேசி உரையாசிரியர் கடவுள் வாழ்த்து உரையில் மேலே காட்டிய செய்யுளையும் மேற்கொல் காட்டுகிறார்.

**ஆசிய ஜோதி**

இது சைவ சமயத்தவரான கவிமணி. தேசிய விநாயகம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. இது புத்தரின் வாழ்க்கை வரலாற்றினை சிறப்புற மொழிகின்றது. எட்வின் அர்னால்டு அவர்களின் லைட் ஆப் ஏசியா என்னும் ஆங்கிலக் கவிதையின் தழுவல் என்ற போதிலும் மூல நூல் போன்ற சிறந்த முறையில் புத்த மத உண்மைகளை எளிய முறையில் எடுத்து இயம்புகின்றது.

**இலக்கண நூல் வீரசோழியம்**

புத்த மித்திரால் இயற்றப்பட்டது. இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் எனும் ஐந்து பிரிவுகளை உடையது புத்த மித்திரர் மாணவரான பெருந்தேவனார். இதற்கு உரை எழுதியுள்ளார். பொன்பற்றி எனும் ஊரைச் சார்ந்தவர் புத்தமித்திரர் இச்சமயத்தை சார்தவர் எழுதிய ஒரே இலக்கண நூல் எனும் பெருமைக்குறிய நூலாகும். சமணர்கள் காட்டிய ஆர்வம் பௌத்தர்காள் இலக்கணத்தில் ஆர்வம் காட்டவில்லை இந்நூலில் பௌத்த சமயம்பற்றி ஆராயப்படுகின்றன சந்தி பற்றி வீரசோழியம் மிக்க்க

**முடிவுரை**

- தமிழகத்தில் நுழைந்த பௌத்த சமயத்தின்பால் ஈர்க்கப்பட்ட பலர் பௌத்த சமயத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.
- பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் தமிழ் மொழியில் இலக்கணங்களை நன்கு பயின்று தமிழ்நாட்டில் பண்புக்கு மரபுக்கும் உகந்த வகையிலும் தமிழ்நாட்டின் பின்னணியுடனும் இலக்கியங்களைத் தோற்றுவித்தனர்.
- பௌத்த சமயத்தைச் சார்ந்த மணிமேகலையும் குண்டலகேசியும் காப்பிய வரிசையில் வைத்து போற்றப்படும் சிறப்புடையனவாகும்.
- இவை நீங்களான பிம்பசாரர் கதை பௌத்த சமயக் கொள்கைகளை தொகுத்து கூறும் சித்தாந்த தொகை திருப்பதிகம் எனும் நூல்களும் தோற்றுவிக்கப்பட்டன. என்பதை கேட்கும் பொழுது. தமிழுக்கு பௌத்தர்கள் ஆற்றிய தொண்டினை அறிந்துகொள்ள முடிகிறது.
- தமிழ் மொழிக்கு பைளத்தர்கள் கொடுத்த கொடை அறியாமல் இருந்திருக்கலாம் எனும்

எண்ணமே மேலோங்கிய நிலையை பாகாணமுடிகிறது.

**துணைநூல் பட்டியல்**

மயிலை சீனி.வேங்கடசாமி(2002) - பௌத்தமும் தமிழும்
மீனா கோபால் பதிப்பகம்
ஜோசப் காலனி ஆதம்பாக்கம்
சென்னை 600088

மே.வெங்கடேசன் (1999) - சமயங்களின் தமிழ்த் தொண்டு
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை 600098

கௌதம் சஞ்சய் (2010) - சமயங்களின் தமிழ்த் தொண்டு
அருள்மொழிப் பிரசுரம்
மேற்கு சைதாப்பேட்டை
சென்னைஎ-600098